ஆண்டு பட்டிகை வழக்கு எண்.48/2026

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 48/2026 | LW- 1 | PW- 1 |

| | |
|---|---|
| Name | : இப்ராம்ஷா ( புகார்தாரர்) |
| Father's/Husband's Name | : அமீர்ஜான் |
| Village | : முஸ்லீம் தெற்கு தெரு |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 49/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of March 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து சைக்கிள் மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி மதியழகன் என்பவரை தெரியும். நான் தனியார் பைப் ஸ்டார் நிதி நிறுவனத்தில் ரூ.3,50,000 கடனாக கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பாக வாங்கியிருந்தேன். 84 தவணைகளில் திருப்பி செலுத்துவதாக கடன் வாங்கி 13 தவணைகள் செலுத்திய நிலையில் 14வது தவணை தொகை கட்டுவதற்கு நான் எதிரியிடம் 2 ஆண்டுகள் தவணை கேட்டிருந்தேன். அதற்குள் 14வது தவணை தொகையை வசூல் செய்வதற்காக ஆஜர் எதிரி பகல் 3.00 மணியளவில் எங்கள் வீட்டிற்கு சென்றுள்ளார். அப்போது நான் சைக்கிள் கடையில் இருந்தேன். என் வீட்டில் என் மனைவி தில்சாத் பேகமும், என் மகள் ஜன்னத்தும் இருந்தபோது, எதிரி எங்கள் வீட்டிற்கு சென்று என் மனைவி மற்றும் மகளிடம் தவணை தொகை கேட்டுவிட்டு சென்றுவிட்டதாகவும், பிறகு

நான் வந்து பார்த்தபோது கதவு வெளியே பூட்டப்பட்டிருந்ததால் கதவை திறந்து என் மனைவி மற்றும் மகளிடம் கேட்டதற்கு ஆஜர் எதிரி வந்துவிட்டு சென்றதாக சொன்னார்கள். எதிரி கதவை பூட்டி சென்றிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில், எதிரி மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு மற்றும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(புகார் மனு அ.த.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** நான் தற்போது எதிரியுடன் சமாதானமாகி விட்டதால் சமூகம் நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் சமாதான மனு மற்றும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(சமாதான மனு அ.த.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** எதிரியுடன் சமாதானமாகிவிட்டதால் நான் வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

2. போலீஸ் விசாரணையில் கடந்த 29.01.2025ம் தேதி மதியம் 3.00 மணிக்கு நான் வீட்டில் இல்லாத சமயம் ஆஜர் எதிரி ஜெயச்சந்திரன் என்பவரின் தூண்டுதலின் பேரில் எங்கள் வீட்டிற்கு வந்து வீட்டிலிருந்த என் மனைவி தில்சாத் பேகத்திடமும், எனது மகள் ஜன்னத்திடமும் என்னை அசிங்கமான பெயரால் சொல்லி எங்கு போனான், பணம் வாங்கினா ஒழுங்கா கட்டமாட்டானா என்றும், உங்கள் வீட்டில் நோட்டீஸ் ஒட்டுகிறேன் என்று சொல்லி, நோட்டீஸ் ஒட்டிவிட்டு என் மனைவியையும், மகளையும் வீட்டிற்குள் உள்ளே வைத்து வீட்டை பூட்டியுள்ளார் என்றால் சரியல்ல. நான் மாதம்தோறும் தவறாமல் தவணை பணத்தை செலுத்திக் கொண்டு வருகிறேன் என்றும், தற்போது ஒரு மாதம் தவணை தொகை செலுத்துவதற்கு நேரமாகிவிட்டதால் பைவ் ஸ்டார் நிதி நிறுவனத்தின் மேலாளர், அவருக்கு கீழ் வேலை செய்யும் ஆஜர் எதிரியை ஏவி

விட்டு அசிங்கமான செயல்பாடுகளில் ஈடுபட்டும், எங்கள் வீட்டு பெண்களுக்கு மானபங்கம் ஏற்படும்படியாக செயல்பட்டதாகவும் கூறி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானமாகிவிட்டதாலும், எதிரி கேட்டுக் கொண்டதாலும் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**</u> இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.13 17:47:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 48/2026 LW- 2 PW- 2

| | |
|---|---|
| Name | : தில்சாத் பேகம் (கண்ணுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : இப்ராம்ஷா |
| Village | : முஸ்லீம் தெற்கு தெரு |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 48/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of March 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து வீட்டுக் குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 என் கணவர். ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 4, 5 மாதங்களுக்கு முன்பாக ஒரு நாள் மாலை சுமார் 4.00 மணியளவில் நானும், என் மகள் ஜன்னத் என்பவரும் வீட்டிலிருந்தோம். அப்போது ஆஜர் எதிரி தவணை தொகை கேட்டு வீட்டிற்கு வந்திருந்தார். நாங்கள் 2, 3 நாட்கள் தவணை கேட்டிருந்தோம். பிறகு 2 நாட்கள் கழித்து நானும், என் மகளும் உள்ளே இருந்தபோது வீடு வெளியே பூட்டப்பட்டிருந்தது. எனவே ஆஜர் எதிரி கதவை பூட்டியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் என் கணவர் எதிரி மீது புகார் கொடுத்துள்ளார். தற்போது எதிரியுடன் சமாதானமாகி விட்டதால் சமூகம் நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்துள்ளோம். தற்போது என்னிடம் காட்டப்படும் சமாதான மனு மற்றும் அதில் உள்ள கையொப்பம்

என்னுடையதுதான். எதிரியுடன் சமாதானமாகிவிட்டதால் நான் வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

2. போலீஸ் விசாரணையில் கடந்த 29.01.2025ம் தேதி மதியம் 3.00 மணிக்கு அ.சா.1 வீட்டில் இல்லாத சமயம் ஆஜர் எதிரி ஜெயச்சந்திரன் என்பவரின் தூண்டுதலின் பேரில் எங்கள் வீட்டிற்கு வந்து வீட்டிலிருந்த என்னிடமும், எனது மகள் ஜன்னத்திடமும் என் கணவரை அசிங்கமான பெயரால் சொல்லி எங்கு போனான், பணம் வாங்கினா ஒழுங்கா கட்டமாட்டானா என்றும், உங்கள் வீட்டில் நோட்டீஸ் ஒட்டுகிறேன் என்று சொல்லி, நோட்டீஸ் ஒட்டிவிட்டு என்னையும், என் மகளையும் வீட்டிற்குள் உள்ளே வைத்து வீட்டை பூட்டியுள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.1 மாதம்தோறும் தவறாமல் தவணை பணத்தை செலுத்திக் கொண்டு வருகிறார் என்றும், தற்போது ஒரு மாதம் தவணை தொகை செலுத்துவதற்கு நேரமாகிவிட்டதால் பைவ் ஸ்டார் நிதி நிறுவனத்தின் மேலாளர், அவருக்கு கீழ் வேலை செய்யும் ஆஜர் எதிரியை ஏவி விட்டு அசிங்கமான செயல்பாடுகளில் ஈடுபட்டும், எங்களுக்கு மானபங்கம் ஏற்படும்படியாக செயல்பட்டதாகவும் கூறி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானமாகிவிட்டதாலும், எதிரி கேட்டுக் கொண்டதாலும் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**</u> இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,
Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.13 17:47:45 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.48/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 48/2026 | LW- 3 | PW- 3 |

Name : ஜன்னத் (கண்ணுற்ற சாட்சி)

Father's/Husband's Name : சிக்கந்தர்

Village : நல்லாகுளம் கரை

Taluk : நத்தம்

District : திண்டுக்கல்

Age : 23/2026

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of March 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து வீட்டுக் குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 என் அப்பா. ஆஜர் எதிரி மதியழகன் என்பவரை தெரியும். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் பகல் சுமார் 3.30 மணியளவில் நானும், என் அம்மா அ.சா.2ம், என் அம்மா வீட்டில் இருந்தபோது, எங்கள் வீட்டின் கதவு வெளியே பூட்டப்பட்டிருந்தது. பின்னர் ஆஜர் எதிரி பூட்டியிருப்பார் என்ற சந்தேகத்தின் பேரில் என் அப்பா அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். தற்போது எதிரியுடன் நாங்கள் சமாதானமாகி விட்டதால் சமூகம் நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்துள்ளோம். தற்போது என்னிடம் காட்டப்படும் சமாதான மனு மற்றும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எதிரியுடன் சமாதானமாகிவிட்டதால் நான் வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

2. போலீஸ் விசாரணையில் கடந்த 29.01.2025ம் தேதி மதியம் 3.00 மணிக்கு அ.சா.1 வீட்டில் இல்லாத சமயம் ஆஜர் எதிரி ஜெயச்சந்திரன் என்பவரின் தூண்டுதலின் பேரில் எங்கள் வீட்டிற்கு வந்து வீட்டிலிருந்த என்னிடமும், எனது அம்மா தில்சாத் பேகத்திடமும் என் அப்பாவை அசிங்கமான பெயரால் சொல்லி எங்கு போனான், பணம் வாங்கினா ஒழுங்கா கட்டமாட்டானா என்றும், உங்கள் வீட்டில் நோட்டீஸ் ஒட்டுகிறேன் என்று சொல்லி, நோட்டீஸ் ஒட்டிவிட்டு என்னையும், என் அம்மாவையும் வீட்டிற்குள் உள்ளே வைத்து வீட்டை பூட்டியுள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.1 மாதம்தோறும் தவறாமல் தவணை பணத்தை செலுத்திக் கொண்டு வருகிறார் என்றும், தற்போது ஒரு மாதம் தவணை தொகை செலுத்துவதற்கு நேரமாகிவிட்டதால் பைவ் ஸ்டார் நிதி நிறுவனத்தின் மேலாளர், அவருக்கு கீழ் வேலை செய்யும் ஆஜர் எதிரியை ஏவி விட்டு அசிங்கமான செயல்பாடுகளில் ஈடுபட்டும், எங்களுக்கு மானபங்கம் ஏற்படும்படியாக செயல்பட்டதாகவும் கூறி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானமாகிவிட்டதாலும், எதிரி கேட்டுக் கொண்டதாலும் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,
Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.13 17:47:50 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்